**வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் - 2022/2023**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும்

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள்

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவில் ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ ஒரு உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 57 (அ) i (LKAS 19) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் பணிக்கொடை தொடர்பாக கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கையில் செயல்முறை திட்டமிட்ட அலகுக் கடன் முறைமைக்கு இணங்க (Actuarial Technigue the Projected unit credit method) கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் ரூபா 29,348,420 தொகையான பணிக்கொடை கணிப்பீடு செய்தல் மற்றும் கணக்கீடு செய்தலானது உரிய கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட EXCEL படிவத்திற்கு தரவுகளை உள்ளடக்குவதன் மூலம் எங்களால் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டது. அக்கணிப்பீட்டிற்கு சரியான தரவுகளை உள்ளடக்குவதன் மூலம் சுயமாக கணிப்பீடு இடம்பெறுவதுடன் அது தொடர்பான அனைத்து ஆவணங்களும் மின் அஞ்சல் மூலம் (email) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் பணிக் கொடையினை கணிப்பீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 (LKAS 37) இன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான 14 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்கு நிகழ்கால பொறுப்பு உள்ள முன்னைய கால சம்பவத்தின் பெறுபேறாக வளங்கள் வெளிச் செல்லும் பொறுப்பு ஏற்படுகையில் மற்றும் அதன் அளவு தொடர்பாக நம்பகரமான ஒரு மதிப்பீட்டினை செய்யக்கூடியதாக இருக்கையில் அதற்காக இறுதி நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு ஒதுக்கீடு செய்தலும் வெளிப்படுத்தலும் செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனிக்கு எதிராக அதில் சேவையில் ஈடுபட்டிருந்த 10 ஊழியர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாக 2022/2023 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இந்த வழக்கு செயற்பாட்டிற்காக வளங்கள் வெளிச்செல்லும் இயலுமை தொடர்பாக மற்றும் அந்த அளவு தொடர்பாக ஒரு நம்பகரமான மதிப்பீட்டினை செய்ய முடியாததனால் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அது பற்றி நிதிப் பிரிவிற்கு அறிக்கையிடப்படாமையின் அடிப்படையில் வெளிப்படுத்துவதற்கு தவறியுள்ளது எனவும் ஏற்றுக் கொள்வதுடன் எதிர்கால நிதிக்கூற்றுக்களின் போது அந்த விடுபாடுகள் சரிசெய்யப்படும் எனவும் குறிப்பிடுகிறேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 .இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021/2022 ஆம் ஆண்டுகள் தொடர்பாக வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கப்பல்கள் மூலம் நிலக்கரிகளை எடுத்துச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளான (Charter Hire Expenses Coal Vessel) ரூபா 5,572,187 தொகை 2022/2023 கணக்காண்டின் போது இனங்காணப்பட்டுள்ளது என கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டதுடன் | உங்களின் தெளிவுபடுத்தலுக்கு இணங்க 2021/2022 ஆம் ஆண்டு தொடர்பான மேற்கூறிய செலவாகிய ரூபா 5,571,187.00 தொகையானது அந்த ஆண்டிற்கான ஒரு செலவாக பதியப்பட வேண்டியதுடன் கம்பனியின் கப்பல்களை வாடகைக்கு வழங்கும் பிரிவினால் அது பற்றி தெரியப்படுத்தப்பட்டதானது | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் செம்மையாக்கப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| அதன் காரணமாக 2021/2022 ஆம் ஆண்டிற்கான நட்டமானது அந்த அளவால் குறைத்துக் காட்டப்பட்டதுடன் LKAS 08 கணக்கீட்டு நியமம் 42 (ஆ) இன் பிரகாரம் ஆரம்பத்தில் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு கடந்த காலத்திற்கு தாக்கமளிப்பதாக முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களாக செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் அது 2022/2023 ஆம் ஆண்டில் நேரடி செலவுகளுக்கு கீழே செம்மையாக்கப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக 2022/2023 ஆம் ஆண்டிற்கான நட்டம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022/23 ஆம் ஆண்டில் இலங்கை நிலக்கரி கம்பனியிடமிருந்து எங்களின் இன்வொயிஸ்களுக்கு பணத்தை செலுத்தும் சந்தர்ப்பத்தின் போதாகும். எனினும் 2021/22 ஆம் ஆண்டில் கணக்காய்வு முடிவடைந்துள்ளதனால் உரிய ஆண்டிற்கு (2021/22) கணக்கு வைப்பதற்கு முடியாததன் காரணமாக 2022/23 ஆம் ஆண்டிற்கு பிழையாக செம்மையாக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்கூறிய செலவான ரூபா 5,572,187.00 பணம் 2021/22 ஆம் ஆண்டிற்கான இலாப/ நட்ட கணக்கில் முன்கொண்டு வரப்பட்டுள்ள மீதிக்கு செம்மையாக்கப்பட வேண்டுமென இணங்கிக் கொள்கிறேன். | வேண்டும். |

**1.5.3 கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 1,857,129,766 ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 10,855,139,608 ஆகும். மேலும் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,210,094,328 மறைப் பெறுமதியாகும். ஆண்டிற்கான நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67.79 சதவீத்தினால் குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் தேறிய சொத்துக்களின் மறை மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.37 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. கம்பனி இரண்டு கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 70 மில்லியன் தொகையான தவணைக்கடன் (Term Loan) மற்றும் அக்கடன் வட்டியினைச் செலுத்துவதற்கு டொலர் 5.44 மில்லியன் தொகை மக்கள் வங்கியிடமிருந்து | 2022/2023 ஆண்டிற்காக அறிக்கையிடப்பட்ட நிதி நட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததானது மக்கள் வங்கியிடமிருந்து ஐக்கிய குடியரசு டொலர்களில் கடனை பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து நடைமுறை ஆண்டு வரையான காலப்பகுதியில் நாணயமாற்று விகிதத்தில் இடம்பெற்ற வழமைக்கு மாற்றமான மாற்றங்களின் காரணத்தினாலாகும்.<br><br>உரிய கடனை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதம் ரூபா 135 ஆக இருந்ததுடன் தற்பொழுது அப்பெறுமதி ரூபா 336.01 வரை அதிகரித்திருந்தது.<br><br>2022/2023 காலப்பகுதியின் போது இலங்கை ரூபாவானது ஐக்கிய குடியரசு டொலருடன் ஒப்பிடுகையில் 12.38% ஆல் குறைப் பெறுமதியாகியிருந்தது. எனினும் அப்பெறுமதியானது மக்கள் வங்கியில் கப்பல் கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட 2015/2016 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் | கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருப்பதனை பாதுகாப்பதற்காக விசேட பொதுச் சபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட நிதி ரீதியான நட்டத்தை குறைக்கும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்தப்பட்ட தவணைக் கடன் வட்டி மூலதமாக்கிய கடன் மற்றும் அவை தொடர்பான வட்டி ரூபா 2,828,293,385 தொகை கம்பனியால் மக்கள் வங்கிக்கு செலுத்துவதன் அடிப்படையில் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐக்கிய குடியரசு டொலர் கடன் மீதியை இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றம் செய்யும் போது ரூபா 2,811,891,329 தொகையான நாணயமாற்று நட்டம் ஏற்பட்டிருந்தமை கம்பனியின் ஒட்டுமொத்த நட்டத்திற்கு காரணமாக இருந்தது. அதற்கிணங்க கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சம்பந்தமாகக் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை தொடர்பாக தெளிவான அடையாளம் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.<br>இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக 2021 யூலை 30 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது (EGM) கம்பனியின் நடவடிக்கைகள் பிரேரிக்கப்பட்டிருந்தும் அந்த நாணயமாற்று நட்டத்தினை குறைக்கும் நடவடிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் 2023 மார்ச் 24 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது அதற்காக புதிய 06 தொழில் முயற்சி செயற்திட்டங்கள் மேலும் பிரேரரிக்கப்பட்டிருந்தன. | இலங்கை ரூபா 2022/2023 ஆம் அண்டின் போது ஐக்கிய குடியரசு டொலருக்கு எதிராக 148.89% ஆக தொகை பெறுமதிக் குறைப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலைமையானது இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் வருடாந்த கணக்குகளில் கண்டிப்பான நிதி ஏற்பாடாக கருதி ரூபா 2,811.89 மில்லியனாக கணிப்பிடப்பட்ட உரிய கப்பல் கடன் மற்றும் தொடர்புபட்ட நாணயமாற்று நட்டம் உயர்ந்த மட்டத்தில் அதிகரித்துச் செல்வது தொடர்பாக நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. உரிய நாணயமாற்று நட்டத்தின் தாக்கத்திற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,210,094,328 மறைப்பெறுமதியை வெளிக்காட்டியமை தொடர்பாக பிரதானமான தாக்கமளித்த ஏனைய 18 காரணிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2023 மார்ச் 31 ஆந் திகதியிளவில் வரையறுத்த கப்பல் கூட்டுத்தாபனத்தினால் அறவிட வேண்டிய வணிக கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,070,761,878 ஆகும். அவற்றில் ரூபா | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். | கடன்பட்டோர்களிடமிருந்து பணத்தை சேகரிப்பதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 1,034,044,153 தொகையானது 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அறவிட முடியாத மீதியாக இருந்ததுடன் ரூபா 257,530,960 தொகை 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரை அறவிட முடியாத மீதியாக இருந்ததுடன் 2022/2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வணிக கடன்பட்டோர் பெறுமதி ரூபா 779,186,765 ஆகும். மேற்கூறிய வணிக கடன்பட்டோர்களுக்கு மத்தியில் உள்நாட்டு அரசாங்க மற்றும் அரசாங்கம் சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கம்பனியால் அறவிட வேண்டிய பணம் ரூபா 1,525,359,729 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 618,045,453 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன்பட்டோர் எனவும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வெளிநாட்டு மற்றும் ஏனைய வணிக கடன்பட்டோர்களிடமிருந்து 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 163,752,420 எனவும் வெளிப்படுத்தப்பட்டது. | | முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வரையறுத்த இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனிக்கும் வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குமிடையே 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி ஏற்பட்ட நிலக்கரி போக்குவரத்து செய்தல் உடன்படிக்கையின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தாமதம்/ நிறுத்திவைத்தல் தொடர்பான அனைத்து பணக் கோரிக்கைகள், ஏற்றுதல் அல்லது விடுவித்தல் முடிவடைந்ததன் பின்னர் முப்பது நாட்களுக்குள் (30) செலுத்த வேண்டிய போதிலும் கம்பனிக்கு ரூபா 3,728,788 பெறுமதியுடனான 02 இன்வொயிஸ்களுக்கான பணத்தை 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | இத்தாமதக் கட்டணத்தை உள்ளடக்கிய ரூபா ஒரு பில்லியனுக்க மேற்பட்ட பணம் இலங்கை நிலக்கரி கம்பனியால் செலுத்த வேண்டியுள்ளது. அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து முயற்சிகளும் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பெறுபேறாக கடனை அறவீடு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினாலும் இப்பணம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. எனினும் இன்னும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை சேகரிப்பதற்காக முறையான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீமானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தி | 2023 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தல் அடுத்து வரும் நிதி ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 133 உடைந்த பொருட்களை அகற்றுவதற்கு மற்றும் அது தொடர்பான ஏனைய செயற்பாடுகள் கணக்காய்வுத் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வுச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடைந்த பொருட்களைச் சேகரித்து மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க பொருள் மீய்வு உரிய காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கம்பனியால் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்துடன் 2023 ஆகஸ்ட் 16 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | உரிய வெளிப்படுத்தலுடன் இணங்கி கொள்கிறேன். எங்களால் நிதிக்கூற்றுக்கள் 2023 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணக்காண்டு முடிவடைந்து உரிய காலத்திற்குள் கம்பனியால் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 3.2 ஆம் பிரிவு | முறையான அங்கீகாரமின்றி கம்பனியால் மீளாய்வாண்டின் போது உபசரிப்பு படிகள், போக்குவரத்து படிகள், வருகைக்கான ஊக்குவிப்பு படிகள் என்பவற்றிற்காக மொத்தமாக ரூபா 15,209,673 தொகை செலுத்தப்பட்டது. | இதில் குறிப்பிடப்பட்ட தற்பொழுது செலுத்தப்படுகின்ற உபசரிப்பு படி, போக்குவரத்துப் படி, வருகைக்கான ஊக்குவிப்பு படி என்பன நிறுவனத்தின் ஆளணி நடைமுறையின் 05 ஆம் இலக்க பிரிவின் கீழ் 2018-02-27 ஆந் திகதி நடைபெற்ற 231 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது 36/2018 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திறகாக வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அங்கீகாரத்துடன் இன்றுவரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு கம்பனி என்பதனால் அரசாங்க தொழில் முற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதனால் உரிய படிகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 433,605,111 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 4,567,786,074 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,134,180,963 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நேரடிச் செலவு ரூபா 2,452,659,820 அல்லது 43 சதவீதம் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 2,427,000,405 அல்லது 36 சதவீதத்தால் குறைவடைதல் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 364,031,003 அல்லது 77 சதவீதத்தால் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| Mv Ceylon Breeze கப்பல் விபத்துக்குள்ளாகியமை சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| i. | Mv Ceylon Breeze கப்பல் 2020 ஆம் ஆண்டின் போது சீனாவின் பியங்கின் துறைமுகத்தில் மீன்பிடிப் படகுடன் (Fishing Vessel) மோதியதன் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட | சீன நீதிமன்றத்துடன் சட்ட நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படுமாயின் மீன்பிடிப் படகிற்கு ஏற்பட்ட சேத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நட்டத்தை மாத்திரமின்றி எங்களின் வழக்கு கட்டணத்தையும் சீன கம்பனியின் வழக்கு கட்டணத்தையும் மற்றும் எங்களின் Mv | கடல்சார் விபத்துக்களின் போது கம்பனியின் கப்பலுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நட்டத்திற்காக இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னும் |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையான நட்டம் அண்ணளவாக ரூபா 16,999,188 ஆக இருந்தது. இக்கப்பலின் காப்புறுதிக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் காட்டப்படுகின்ற கழித்தல்களின் (Deductible) பெறுமதி USD 100,000 ஆக இருந்ததன் காரணமாக மேற்கூறிய நட்டம் அப்பெறுமதிக்கு கழிக்கப்பட்டதனால் கம்பனியால் பொறுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அக்கப்பல் மீண்டும் ஒரு தடவை 2021 யூன் 06 ஆந் திகதி சிங்கப்பூரில் லியோபோல்ட் கப்பலுடன் மோதியதன் காரணமாக ஏற்பட்ட விபத்துக்குரிய நட்டம் இந்த அறிக்கைத் திகதி வரை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | Ceylon Breeze கப்பலுக்கு ஏற்பட்ட நட்டத்தையும் எங்களால் பொறுத்துக் கொள்ள வேண்டி ஏற்படும்.<br><br>அதற்கிணங்க மேற்கூறிய ஆலோசனையை கவனித்துப் பார்த்ததன் பின்னர் கப்பல் கூட்டுத்தாபன முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு இன்னும் நட்டம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக RMB 135,000/= (USD 20,149/=) சட்டரீதியான ஒரு உடன்படிக்கையின் வாயிலாக பிரச்சினை இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் அப்போது உள்ளடக்கப்பட்டுள்ள காப்புறுதி உறுதியின் பிரகாரம் அதன் தொடக்க நிபந்தனையாவது US $ 100,000/= deductible பெறுமதிக்கு மேல் எங்களின் கப்பலின் நட்டம் குறைவடைந்துள்ளதனால் எங்கள் கூட்டுத்தாபனத்திற்கு கப்பலின் நட்டத்தை பொறுத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. | முறைப்படியான மற்றும் துரித நடைமுறையினை பயன்படுத்துதல் வேண்டும். |
| (ii) | கப்பல் சேதமடைந்தமை தொடர்பாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் சேதம் சம்பந்தமான முழுமையான விபரம் அரசாங்க நிதி திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் வெளிப்படுத்தப்பட்டது. | கப்பல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2020/2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் 261 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம் மற்றும் 262 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர் சபைப் பத்திரங்களை அனுப்பி சம்பவம் தொடர்பாக எழுத்துமூலம் தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டது.<br><br>அவ்வாறே ஒவ்வொரு பணிப்பாளர் சபைக் கூட்டங்களிலும் பொதுத் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொதுத்திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் பங்குபற்றுவதுடன் அனைத்து பணிப்பாளர் சபை பத்திரங்களினதும் குறிப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்படும். | உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கப்பலின் சேதம் சம்பந்தமான முழுமையான விபரம் பொதுத்திறைசேரியின் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) 2016 சனவரி 21 ஆந் திகதிய அமைப16/0035/737/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் 2005 மே 06 ஆந் திகதிய 415 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியதானது வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக என்பதுடன் அதன் போது கம்பனி அரசாங்க நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். 2019 ஏப்ரல் 01 அந் திகதியிலிருந்து 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையான 04 ஆண்டுகள காலத்தினுள் அரசாங்க துறையில் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை பரீட்சித்த போது வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்து காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | 2019/20 | 2020/21 | 2021/22 | 2022/23 |
|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 28 | 22 | 23 | 27 |
| இறக்குமதி தவணைகளின் எண்ணிக்கை | 2,357 | 1,925 | 1,300 | 821 |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

2019/20, 2020/21, 2021/22 மற்றும் 2022/23 நிதி ஆண்டுகளின் போது அரசாங்கத் துறையின் பொருட்களை போக்குவரத்துச் செய்தல் கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. முன்னைய ஆண்டுகளின் போதும் அதேபோல 2018/19 ஆம் நிதி ஆண்டின் போதும் தற்பொழுது கப்பல் கூட்டுத்தாபன போக்குவரத்தின் மூலம் மேற்கொள்கின்ற, அரைவாசியாக மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் மேற்கொள்ளப்படாத நிறுவனங்களுக்கும் தொடர்ச்சியாக தெரியப்படுத்துதலும் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்துதல்களும் மேற்கொள்ளப்படுவதனால் உயர்ந்த செயலாற்றல் மட்டத்தினை அடைந்துகொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியுமாக இருந்தது. எனினும் நாட்டினுள் மாத்திரமின்றி ஒட்:டுமொத்தமாக எடுத்துக்கொள்கையில் முழு உலகத்திலும் உருவாகியுள்ள பாதகமான நிலைமையின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களின் காரணமாக 2020/21, 2021/22 மற்றும் 2022/23 நிதி ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தினூடாக போக்குவரத்துச் செய்யப்பட்ட எண்ணிக்கையானது குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது. அதற்கு பிரதானமாக 10 காரணங்கள் தாக்கமளித்துள்ளது.

**சிபாரிசுகள்**

அரசாங்க நிறுவனங்கள் கப்பல்களின் மூலம் பொருட்களை இறக்குமதி செய்யும் போது கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக போக்குவரத்து செய்வதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(ஆ) 415 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள எற்பாடுகளின் பிரகாரம் வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் கைவிடுதல் வழங்க முடியாததானது அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமாக இறக்குமதிப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு சிக்கலான சந்தர்ப்பங்களில் மாத்திரமாகும். கம்பனிக்கு செலவு செய்வதற்கு ஏற்படும் கப்பல்

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகின்ற முழு கைவிடுதல் அறிவித்தல் எண்ணிக்கையில் மிகவும் அதிக அளவானவை இத்தொகுதியின் கீழ் வழங்கப்படுவதுடன் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரதான நிறுவனமாக சுகாதாரப் பிரிவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அந்த

**சிபாரிசுகள்**

இரசாங்க நிறுவனங்கள் கப்பல்களின் மூலம் பொருட்களை இறக்குமதி செய்யும் போது கப்பல் கூட்டுத்தாபனத்தி

வாடகையானது வழங்குனரினால் இணங்கி கொள்ளப்பட்ட கப்பல் வாடகையினை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தின் போது அது பற்றி கைவிடுதல் அறிவித்தலின் மூலம் இறக்கமதியாளருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் கப்பலில் ஏற்றியதன பின்னர் கைவிடுதல் அறிவித்தலினை வேண்டியிருத்தல் அவசர கொள்வனவுகளின் காரணமாக CIF விலைகளின் அடிப்படையில் பெறுகைகளை வழங்கியிருத்தல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் கம்பனியால் 2019/20 ஆம் ஆண்டின் போது 319 எண்ணிக்கையும், 2020/21 ஆம் ஆண்டின் போது 298 எண்ணிக்கையும், 2021/22 ஆம் ஆண்டின் போது 185 எண்ணிக்கையும், 2022/23 ஆம் ஆண்டின் போது 118 எண்ணிக்கையும் ஆக சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக கைவிடுதல் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

நிறுவனங்களில் உள்ள கட்டமைப்பினைப் போல இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் பாரிய அளவு காரணமாக பின்பற்றப்படுகின்ற பல்வேறு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இதற்கு தாக்கமளித்துள்ளது.

பொருட்களின் இறக்குமதி நடவடிக்கைகளின் போது வழங்குனரின் தற்றுணிபின் பேரில் போக்குவரத்து மேற்கொண்டிருக்கையில் அப்பொருட்களுக்காக தேவையான ஆவணங்கள், நாணயக் கடிதம் என்பன வழங்கியுள்ள வங்கியிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டவாறு பெற்றுக்கொண்டு தாமதக் கட்டணத்தை செலுத்தாது விடுவிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக கைவிடுதல் அறிவித்தலினை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் வழக்கம் போல போக்குவரத்திற்காக உரிய நிறுவனத்தினால் எங்களுக்கு விசாரணைகள் வழங்கப்படுமாயின் அவற்றிற்குரிய போக்குவரத்து நடவடிக்கைகளை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றும் இயலுமை காணப்படக்கூடியதாக இருந்ததுடன் வெளிநாட்டு நாணயம் வெளிச்செல்லும் அளவினைக் குறைத்து வெளிநாட்டு நாணயத்தினை நாட்டிற்குள் சேமிக்கக்கூடியதாகவும் இருந்ததானது உரிய பெறுகைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற பெறுகை நடைமுறைகளின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துமாக இருந்தால் மாத்திரமாகும்.

னூடாக போக்குவரத்து செய்வதற்குரிய நடவடிக்கைக் முகாமைத்துவத்தி னால் எடுக்கப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | முழுமையாக அரசாங்கத்திற்கு உரிமையுள்ள ஒரு கம்பனியாக அரசாங்கத்துறையின் இறக்குமதிப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதன் மூலம் கம்பனியின் இலாபத்தன்மையை அதிகரிக்கச் செய்வது போல வெளிநாட்டு கப்பல் கம்பனிகளின் மூலம் மேற்கொள்கின்ற அரசாங்க நிறுவனங்களின் போட்டியான கப்பல் கட்டளை முறைமையின் அடிப்படையில் கம்பனிக்கு சொந்தமாக்கி கொள்ளும் பொறுப்பு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் கம்பனியின் போக்குவரத்து கட்டணமானது இறக்குமதியுடன் சம்பந்தப்பட்ட வழங்குனர்களின் கப்பல் கட்டணத்தை விட அதிகரித்ததன் காரணமாக 2019/2020 ஆம் ஆண்டிலிருந்து 2022/2023 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் இக்கைவிடுதல் அறிவித்தல் முறையே 174, 163, 150 மற்றும் 67 எண்ணிக்கையானவை வழங்கப்பட்டிருந்தன. | பல வழங்குனர்கள் அவர்களின் கேள்வி ஆவணங்களில் நடைமுறைச் சாத்தியமற்ற பொருள் போக்குவரத்து கட்டணங்கள் (Unrealistic freight rates) குறிப்பிடப்பட்டிருந்தும் உண்மையாகவே கப்பல் துறையில் அவ்வாறான போக்குவரத்து விலைகள் காணப்படுவதில்லை. CIF வலிலைகளைக் குறிப்பிடும் போது சரியான பொருள் போக்குவரத்து கட்டணத்தை குறிப்பிடுவதற்கு பதிலாக வழங்குனரினால் பொருள் போக்குவரத்து கட்டணங்களில் ஒரு பகுதி FOB விலைக்கு அல்லது பொருட்களின் கிரயத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தமை இதற்கு பிரதான காரணமாகலாம்.<br><br>பல்வேறு நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்ற பெறுகை நடவடிக்கைகளில் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளுக்காக நீண்டகால செல்லுபடியாகும் தன்மையினை வேண்டி இருக்கும் நிலைமையும் பெரும்பாலும் காணப்பட கூடியதாக இருநததுடன் கூடுதல் தளம்பல் உள்ளதான கப்பல்துறைச் சந்தையில் கீழ் மட்டத்திலுள்ள விலைகள் நீண்டகால செல்லுபடியாகும் தன்மையை பெற்றுக்கொள்ள முடியாத நடைமுறைச் சிக்கலும் காணப்பட்டது. மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் உண்மையான தீவிரத்திற்கு இவ்வாறான ஒழுங்கீனங்கள் பெரும்பாலும் தாக்கமளிக்கும். | கப்பல் துறையில் காணப்படுகின்ற தீவிரமான போட்டி நிலைமையின் கீழ் பொருள் போக்குவரத்தினை கம்பனிக்கு சொந்தமாக்கிக் கொள்ளும் முறையான விலையைத் தீர்மானிக்கும் நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்குரிய இராஜதந்திர உத்தியோகத்தர்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பயணப் பொதிகள், பொருட்கள் என்பவற்றை நகர்த்துதல், பொதிசெய்தல், போக்குவரத்துச் செய்தல், விடுவித்தல் என்பன வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் சேவைகளை வழங்குகின்ற நிறுவனமான வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் உரிய விலைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற இலங்கை தூதுவர்கள், உயர்ஸ்தானிகர், மற்றும் கொன்ஸோல் அலுவலகங்களில் சேவைசெய்வதற்காக நியமிக்கப்படுகின்ற இலங்கை இராஜதந்திர உத்தியோகத்தர்களின் கதவுக்கு கதவு (Door to Door basis) என்ற பெயரிலான சேவைத் தொகுதியின் கீழ் வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதுடன் | பதிலில் காட்டப்பட்டுள்ளவாறு வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புகொண்டு உரிய கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் FA/OAM & D/HD/CSC/GEN ஆம் இலக்க 2023 சனவரி 25 ஆந் திகதிய கடித்தின் பிரகாரம் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றது என வெளிப்படுத்தப்பட்டது. | இராஜதந்திர சேவைக் காலம் முடிவடைந்து வருகை தருகின்ற உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு துறைமுகத்திலிருந்து வீட்டிற்கு (Discharging Port to Door) சேவைகள் வழங்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக தாக்கமளிக்கின்ற பல்வேறு காரணிகளின் மாற்றங்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற வேண்டுதல்களை முன்னிட்டு அடிக்கடி விலைத் திருத்தங்களும் செய்யப்படுகின்றன.<br><br>எதிர்பாராத வகையில் பொருளாதாரத்தில் இடம்பெற்ற மாற்றங்களுக்கு ஒத்த வகையில் எங்களின் சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரிக்குமாறு 2022-05-31, 2022-07-05 மற்றும் 2022-10-20 ஆந் திகதிகளில் எழுத்து மூலமும் அதற்கு மேலதிகமாக இருதரப்பினர்களுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் மூலமும் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தும் அண்ணளவாக 25% அளவிலான கட்டணத்தை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2020 நவம்பர் 10 ஆந் திகதி வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மற்றும் TERO MARINE ASIA PACIFIC PTE LTD உடன் 06 மாத கால எல்லைக்காக கம்பனியின் கப்பலுக்காக கணனி அடிப்படையிலான கப்பல் முகாமைத்துவ முறைமையினை அமுல்ப்படுத்துவதற்கு USD 102,800 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. முதலாவது ஆண்டில் 03 கட்டங்களில் இந்த முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் முற்பணத்திற்காக ரூபா 2,903,208 (USD | சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சில தாமதம் ஏற்பட்டுள்ளது. கப்பல் சம்பந்தமான முகாமைத்துவ செயற்பாட்டின் போது இக்கணனி முறைமை முக்கியமானது என முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.<br>இச்செயற்திட்டத்தினை துரிதமாக முடிவுறுத்துவதற்கு தொழில்நுட்ப | கம்பனியின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இக்கணனி முறைமையை ஈடுபடுத்துவதா இல்லையா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்து முறையான தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 15,400) மற்றும் முறைமையின் திட்டத்தை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக ரூபா 1,563,087 தொகையாக (USD 7,700) ரூபா 4,466,295 தொகை செலவு செய்து 02 கப்பல்களுக்கு முறைமை ஸ்தாபிக்கப்பட்டு 03 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் இந்த கணனி முறைமை அமுல்ப்படுத்தப்படாது காணப்பட்டதுடன் கம்பனியின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக உரிய செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | அதிகாரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | புத்தளம் லக்விஜய அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியை போக்குவரத்து செய்யும் கப்பல்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக கேள்வி மனுக்களை கோரி தெரிவுசெய்யப்பட்ட 02 படகுச் சேவைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் பிரகாரம் சர்வதேச வகைப்படுத்தப்பட்ட கம்பனிகள் சம்மேளத்தின் அங்கத்துவ கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் கடல் பயணத்திற்கான பொருத்த தன்மை சான்றிதழினை (Sea worthiness Certificate) அல்லது வகைப்படுத்தப்பட்ட கம்பனிகள் சான்றிதழினை சமர்ப்பிக்காமை தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது குறிப்பிடத்தக்க அளவில் விடையளித்திருககாமை ஆகிய விடயங்களின் காரணமாக ஒப்பந்தம் வழங்குதல் சிபாரிசு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கரையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் (Designated Person Ashore - DPA) படகுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது இந்த இரண்டு கேள்விதாரர்களும் கேள்வி கோரலில் குறிப்பிட்ட வரையறைகளை நிறைவேற்றியிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் 2014/15 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த படகு | புத்தளம் லக்விஜய அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரிகளை போக்குவரத்துச் செய்கின்ற கப்பல்களுக்கு படகுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முறைப்படியாக தேசிய பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தி வெளிப்படைதன்மையுடன் கேள்வி கோருதல் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை வேண்டிக் கொள்பவர்கள் தேவையான தகமைகளைப் பெற்றிருக்கவில்லை எனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வெளிப்படுத்தியிருந்ததுடன் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஏனைய எந்த தகமையையும் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் கடந்த சில ஆண்டுகளின் போது முன்வந்திருக்காததுடன் இம்முயையும் அவ்வாறே இடம்பெற்றிருந்தது.<br><br>அதற்கிணங்க அவர்களின் நீண்டகால அனுபவம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கருத்தில் கொண்டு கூட்டுத்தாபன | பத்திரிகை அறிவித்தலுக்கு மேலதிகமாக உரிய பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து இன்னும் கேள்வி மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அச்சேவைகளில் காணப்படும் குறைபாடுகளை குறைப்பதற்கும் முகாமைத்துவத்தினால் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்குனர்கள் இருவர் மாத்திரம் கேள்வி மனுக்களை சமர்ப்பிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது எனவும் இந்த வழங்கனர்கள் சம்பந்தமாக காணப்படுகின்ற சேவை நம்பகத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு சேவைத் தேவைப்பட்டினைக் கருதி வேண்டிக் கொண்டவர்கள் இருவரும் சமர்ப்பித்த விலை மனுக்களுக்கு 2022 செப்தெம்பர் 21 ஆந் திகதி இக்பெறுகை வழங்கப்பட்டிரந்தது. 2023/24 ஆம் ஆண்டின் போதும் இச்சேவைக்காக இந்த இரண்டு வழங்குனரிடமே பெறுகை வழங்கப்பட்டிருந்ததுடன் படகுகள் தொடர்பான கேள்விகோரும் வரையறைகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையின் காரணமாக அதில் பயணம் செய்கின்ற உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு தொடர்பாக சிக்கல் காணப்படுகின்றது எனவும் அக்குறைபாட்டின் காரணமாக சில விபத்துக்களின் போது காப்புறுதி பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும் ஆபத்து காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தின் இணக்கப்பாட்டின் மூலம் இப்பெறுகை வழங்கப்பட்டது. அவ்வாறே இது தேசிய தேவைப்பாடாகக் கருதி ஏனைய மாற்று வழிகள் இல்லாததனால் அத்தரீர்மானம் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டது.<br><br>இதன் போது உத்தியோகத்தர்களின் பாதுகாப்பிற்காக சிபாரிசு செய்யப்பட்ட உயிர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்து கொண்டு பயணம் செய்வதற்கு அணியும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் உரிய படகு உரிமையாளரினால் அவை வழங்கப்படுகின்றன.. அதன் மூலம் அவர்களின் பயணத்திற்கு பர்துகாப்பு வழங்கப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களித் தன்மையும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டல் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>2018/2019 இலிருந்து 2022/2023 இல் முடிவடையும் ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டமானது வியாபாரச் சூழல் மாற்றமடைவதற்கு இணங்க நாளதுவரையாக்குவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2018/19 - 2022/2023 ஐந்தாண்டு திட்டமானது 06-12-2018 ஆந் திகதி பொது:த்திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் 2023/2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையினை 12-08-2019 ஆந் திகதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்றுநோய் நிலைமையினை முன்னிட்டு வீட்டிலிருந்து சேவையாற்றுதல் மற்றும் தவணை வேலை முறைமைக்கு அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் கம்பனியின் கட்டாய குறிக்கோள்கரைள அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் தத்திரோபாயத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஐந்து ஆண்டுத் திட்டம் தொடர்பாக வருடாந்தம் நாளதுவரையாக்கிய அறிக்கையை தயாரித்தல் தாமதமடைந்திருந்த போதிலும் 2023/24- 2027/2028 ஐந்தாண்டு திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | |
| (ஆ) 2019/2018 - 2022/2023 கூட்டிணைந்த திட்டத்தின் 4.2 ஆம் பந்தியில் உத்தேச 07 புதிய தொழில்முயற்சி திட்டங்கள் காட்டப்பட்டிருந்தன. அவற்றின் 05 செயற்பாடுகள் 2019/2018 இலிருந்து 2023/2022 வரையான 05 ஆண்டுகளுக்குள் அடைந்துகொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதததுடன் புதிய தொழில்முயற்சி வாய்ப்புக்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் ஒவ்வொரு விடயத்தின் கீழ் பதிலில் காட்டப்பட்டுள்ள நிலைமையின் கீழ் அவற்றினை அமுல்ப்படுத்துதல் தடைப்பட்டிருந்தது. | கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிட்ட தொழில்முயற்சிகள் திட்டம் அல்லது முறைப்படியாக இனங்காணப்பட்ட புதிய தொழில்முயற்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் வருமான மூலங்கள் சம்பந்தமாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பொருத்தமானதாக இலக்குகளையும் செயலாற்றல் குறிகாட்டிகளையும் தோற்றுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் இலக்குகளை தோற்றுவிக்கும் போது கடந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்குகள் மற்றும் உள்ளபடியான நிலைமைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது கம்பனியின் செயலாற்றல் இலக்குகளை தோற்றுவிக்கும் போது இலகுவாக அடைந்து கொள்ளக்கூடிய இலக்குகளைத் தோற்றுவித்து அதன் அடிப்படையில் செயலாற்றலினை அளவீடு செய்து காட்டப்பட்டிருந்தது. இதற்குமேலதிகமாக கம்பனியால் வருமான மூலங்களை இனங்காணும்போது ஆண்டின் போது உருவாகியிருக்காத வருமான மூலங்களும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும். | வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் இரண்டு கப்பல்கள் நிலக்கரி கம்பனிக்கு நிலக்கரிகளை போக்குவரத்துச் செய்வதற்காக ஈடுபடுத்தப்படாததுடன் சர்வதேச வியாபாரத்தின் மூலம் அதிக அளவான உரிமைப் பத்திரம் பெற்ற வாடகை வருமானத்தை உழைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டது. இலங்கை நிலக்கரி கம்பனியின் நிலக்கரிகளை போக்குவரத்துச் செய்வதற்கு இருந்த காலமும் உரிமைப் பத்திரம் பெற்ற வாடகை வருமானத்தை உழைப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததனால் கூட்டுத்தாபனத்தின் உரிமைப்பத்திரம் பெற்ற வாடகை வருமானம் அதிகரித்துள்ளது. அக்கம்பனியால் வரையறுத்த | நிறுவனத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளக் கூடியவகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை முறைப்படியாக தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| வருமான மூலம் | செயல்நடவடிக்கைத் திட்டம் | | உள்ளபடியான செயலாற்றல் | | வருமான சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | வருமானம் | செலவு | வருமானம் | செலவு | % |
| நிலக்கரி போக்குரத்து | 3,128 | 2,675 | - | - | - |
| உரிமைப்பத்திரம் பெற்ற வாடகை வருமானம் | 2,293 | 816 | 5,337 | 1,893 | 133% |
| Address Commission on Freight | 72 | - | - | - | - |
| Address Commission on Lightering | 472 | - | 314 | - | -33% |
| நிலக்கரியை வழங்குகின்ற கப்பலுக்காக முகவர் சேவையை வழங்குதல் | 41 | - | 15 | - | -63% |
| கனடேனருக்குள் கொள்கலன்களை போக்குவரத்துச் செய்தல் | 564 | 496 | 760 | 611 | 35% |
| சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவித்தலும் பகிர்ந்தளித்தலும் | 20 | 12 | 67 | 47 | 235% |

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுகின்ற கப்பல் கட்டணத்தை செம்மையாக்குவதற்கு (match & win) முடியாததனால் இந்த எதிர்பார்த்த வருமானமாகிய ரூபா 72 மில்லியனை உழைப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் Address Commission on Lightering வருமானம் குறைவடைவதற்கு பிரதான காணரமாவது கொண்டு வரப்பட்ட நிலக்கரிகளின் அளவானது உடன்படிக்கை செய்யப்பட்ட அளவுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்தமையாகும். நிலக்கரிகளின் 37 கப்பல் இருப்புக்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 23 நிலக்கரி கப்பல் இருப்புக்களை மாத்திரம் கொண்டுவரக்கூடியதாக இருந்தது. நிரந்தரமற்ற கப்பல் சேவைகளின் மூலம் மேற்கொள்கின்ற தொழில்முயற்சிகளில் கொண்டுவருகின்ற கொள்கலன்களை போக்குவரத்து செய்வதன் மூலம் ரூபா 564 மில்லியனாக எதிர்பார்த்த வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது அதற்கு தாக்கமளிக்கின்ற அனைத்து விடயங்களையும் கவனத்திற்கு எடுத்து இலக்குகள் தயாரிக்கப்படுகின்றன. பொருட்களை விடுவித்தல் நாட்டிற்குள் போக்குவரத்து செய்தல் இறக்குமதி மற்றும் ஏனைய அனைத்து சேவைகளுக்குமான செலவுகளும் மிகவும் வழமைக்கு மாற்றமான வகையில் அதிகரித்துச் செல்வதற்கு மேலே காட்டப்பட்ட அனைத்து விடயங்களும் காரணமாகும்.